முழுப் பதிப்புரிமையுடையது

SRI LANKA

இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

மட்டம் III பரீட்சை – 2026 சனவரி

(302) முகாமைத்துவக் கணக்கீடும் நிதியியலும்

(Management Accounting and Finance)

2025-02-08
முற்பகல்
[8.45 – 12.00]

பக்கங்கள் : 10
வினாக்கள் : 10

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம்*** : *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
விடையெழுத : 03 மணித்தியாலம்

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***

(3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *எழுதப்பட வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. எடுகோள்கள் எதனையும் மேற்கொண்டிருந்தால் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்படும்.*

(6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச்சொல்லைக் கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் வினாக்களுக்கான விடைகளை* ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரலில்*** *தரப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின் அடிப்படையில் எழுதுதல் வேண்டும்.*

(7) ***கணித அட்டவணை*** *வழங்கப்படும்.*

(8) *100 புள்ளிகள்.*

பகுதி A

(மொத்தம் 20 புள்ளிகள்)

வினா 01

வரையறுக்கப்பட்ட பிக்ஸ் கம்பனியானது பொருள் P ஐ உற்பத்தி செய்து, விற்பனை செய்கிறது. பின்வரும் தகவல்கள் **பொருள் P** இன் நியமக் கிரய அட்டையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன:

	அலகொன்றிற்கு (ரூ.)
விற்பனை விலை	3,000
நேர் பொருள்	1,200
நேர் கூலி	950
மாறும் மேந்தலைகள்	320

மாதாந்த பாதிடப்பட்ட நிலையான மேந்தலை ரூ. 4,200,250/-.

மாதமொன்றிற்கான பாதிடப்பட்ட உற்பத்தி / விற்பனை 30,000 அலகுகளாகும்.

நீங்கள் செய்யவேண்டியவை :

பின்வருவனவற்றைக் **கணிப்பிடுக** :

(a) இலாப – நட்டமற்ற புள்ளி (BEP) – அலகுகளில். (03 புள்ளிகள்)

(b) மாதத்திற்கு எதிர்பார்க்கப்பட்ட இலாபம் –பாதிடப்பட்ட விற்பனை அளவில் (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

வினா 02

வரையறுக்கப்பட்ட எமி கம்பனி ஆனது **பொருள் X** இனைத் தயாரித்து, மொத்த விற்பனையில் ஈடுபடுகிறது. பின்வரும் தகவல்கள் **வரையறுக்கப்பட்ட எமி கம்பனி**யின் நிதிக் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

(ரூ. '000)

மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது	**2025**	**2024**
விற்பனைகள்	21,300	19,800
விற்பனைக் கிரயம்	13,000	12,276

மார்ச் 31 இல்	**2025**	**2024**
தொக்கு	1,172	906
வியாபார வருமதிகள்	3,550	3,266
வியாபார சென்மதிகள்	2,570	2,110

அனைத்து விற்பனைகளும் கொள்வனவுகளும் கடனடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன.

நீங்கள் செய்யவேண்டியது :

2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட எமி கம்பனியின்** தொழிற்படு மூலதனச் சுற்றுக் காலத்தை (நாட்களில்) **கணிக்குக.** (05 புள்ளிகள்)

வினா 03

பாதீட்டுக் கட்டுப்பாட்டுக் கூற்றுக்கள் கண்காணித்தல், பகுப்பாய்வு செய்தல், கட்டுப்படுத்தல், தீர்மானம் எடுத்தல் நோக்கங்களுக்காக கம்பனிகளால் வழக்கமாகத் தயாரிக்கப்படுகின்றன. இத்தகைய கூற்றுக்கள் பின்னூட்ட (Feedback) மற்றும் முன்னூட்டக் (Feed forward) கட்டுப்பாடுகளை வழங்குகின்றன.

நீங்கள் செய்யவேண்டியவை :

(a) "பின்னூட்டக் கட்டுப்பாட்டிற்கும்", "முன்னூட்டக் கட்டுப்பாட்டிற்கும்" இடையிலான வேறுபாட்டை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) பாதீடலின் இரண்டு (02) அணுகுமுறைகளைக் (approaches) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

வினா 04

வரையறுக்கப்பட்ட டெக்னோ கம்பனி அதன் சேவை நாடுநர்களுக்காகத் தனிப்பயனாக்கப்பட்ட மென்பொருள் தீர்வுகளை உருவாக்குகிறது. அது பெரும்பாலும் அத்தகைய செயற்றிட்டங்களுக்கு வாடகைக்கு அமர்த்தப்படுகின்ற சுயாதீனப் பணியாளர்களைப் (freelance staff) பயன்படுத்துகிறது.

வரையறுக்கப்பட்ட டெக்னோ கம்பனி அதன் ஏற்கனவேயுள்ள சில செயற்றிட்டங்கள் தாமதமடைவதை எதிர்கொள்கிறது. அது செலவுகளைச் சமாளிக்க குறுங்காலச் செயற்றிட்டங்களை மேற்கொள்வதில் ஆர்வம் காட்டுகிறது. **வரையறுக்கப்பட்ட அப்பிள் கம்பனி**, அதன் இருப்புத் தொகுதிக்கான மென்பொருள் ஒன்றை உருவாக்குவது தொடர்பில் **வரையறுக்கப்பட்ட டெக்னோ கம்பனியிடம்** வினவியுள்ளது. இந்த மென்பொருள் 4 மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். **வரையறுக்கப்பட்ட டெக்னோ கம்பனி** இந்தப் புதிய செயற்றிட்டத்திற்கான விலைகோரலைச் (quotation) சமர்ப்பிக்க வேண்டியுள்ளது.

இந்தக் குறுங்காலச் செயற்றிட்டம் தொடர்பில் பின்வரும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன :

(1) இந்தச் செயற்றிட்டத்திற்குத் தேவைப்படும் மனித வளங்கள் பற்றி பின்வருமாறு மதிப்பிடப் பட்டுள்ளது.:

பணியாளர் தேவை	மணித்தியாலங்களின் எ/கை	நியம மணித்தியால வீதம் (ரூ.)
மென்பொருள் உருவாக்குபவர்கள்	2,880	24,000
வியாபாரப் பகுப்பாய்வாளர்	224	9,000
சோதனையாளர்கள்	224	15,000
செயற்றிட்ட முகாமையாளர்	720	24,000

(2) மென்பொருள் உருவாக்குநர்களின் முழுப் பணியாளர் தேவையும் இந்தச் செயற்றிட்டத்திற்காக வாடகைக்கு அமர்த்தப்பட வேண்டும். ஏற்கனவேயுள்ள மென்பொருள் உருவாக்குநர்களுக்கு செயலற்ற மணித்தியாலங்கள் (idling hours) எதுவுமில்லை.

(3) ஏற்கனவேயுள்ள செயற்றிட்டங்களில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, தற்போது செயலற்றிருக்கின்றதும் மற்றொரு செயற்றிட்டத்திற்காக வாடகைக்கு அமர்த்தப்பட்டு, கொடுப்பனவு செலுத்தப்படுவதுமான சில சோதனையாளர்கள் இருக்கின்றனர். செயலற்ற மணித்தியாலங்களின் எண்ணிக்கை 150 மணித்தியாலங்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

(4) வியாபாரப் பகுப்பாய்வாளரும் செயற்றிட்ட முகாமையாளரும் முறையே மாதாந்தம் ரூ. 300,000/- உம் ரூ. 1,000,000/- உம் சம்பளம் பெறுகின்ற நிரந்தரப் பணியாளர்கள் ஆவர். இந்தச் செயற்றிட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு தற்போதுள்ள வியாபாரப் பகுப்பாய்வாளர்களுக்கும் செயற்றிட்ட முகாமையாளர்களுக்கும் போதுமானளவு ஓய்வு நேரம் (free time) காணப்படுகிறது.

(5) இந்தச் செயற்றிட்டத்திற்காக ஒரு புதிய உரிமத்தின் (licensing) தேவை காணப்படுகிறது. இதற்கு ரூ. 6 மில்லியன் செலவாகும்.

(6) இந்தச் செயற்றிட்டத்திற்காகச் செலவழிக்கப்படக்கூடிய ஏனைய மேந்தலை ரூ. 1 மில்லியனாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

(7) **வரையறுக்கப்பட்ட டெக்னோ கம்பனி** இந்தச் செயற்றிட்டத்திற்கான விலையாக ரூ. 80,000,000/- இனை வசூலிகிக்றது.

நீங்கள் செய்யவேண்டியது :

வரையறுக்கப்பட்ட டெக்னோ கம்பனி இந்தக் குறுங்காலச் செயற்றிட்டத்தை ஏற்க வேண்டுமா என்பதை **மதிப்பிடுக.**

(உங்களது விடையை ஆதரிப்பதற்குத் தேவையான கணிப்பீடுகளைத் தருவதுடன், ஒவ்வொரு கிரயமும் தொடர்புடையதா, இல்லையா என்பதைக் குறிப்பிடுக.) (05 புள்ளிகள்)

பகுதி A முடிவு

பகுதி B

(மொத்தம் 30 புள்ளிகள்)

வினா 05

வரையறுக்கப்பட்ட ஹீல் கம்பனி சப்பாத்துகளைத் தயாரித்து, விற்பனை செய்கிறது. கம்பனியின் செயற்பாடுகள் தொடர்பில் பின்வரும் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

(1) 60% விற்பனைகள் 30 நாட்கள் கடன் காலத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளை எஞ்சியவை காசு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2025 டிசெம்பர் முதல் 2026 மார்ச் வரை பாதிடப்பட்ட விற்பனைகள் பின்வருமாறு :

	டிசெம்பர்-25	சனவரி-26	பெப்ரவரி-26	மார்ச்-26
விற்பனைகள் (ரூ.)	20,400,000	16,000,000	8,000,000	11,000,000

(2) எந்த நேரத்திலும் விற்பனையில் 30% ஆனது பங்களிப்பு விகிதமாகப் பேணப்படுகிறது.

(3) நேர் பொருள் கிரயமானது மொத்த மாறும் கிரயத்தின் 60% இற்குச் சமானமாகும். உற்பத்திக்கு வசதியளிப்பதற்காக பொருள்கள், கொள்வனவு செய்யப்படும் திகதியில் இருந்து 60 நாட்கள் என்ற கடன் காலத்துடன், விற்பனைக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே கொள்வனவு செய்யப்படுகின்றன.

(4) நேர் கூலிக் கிரயமானது மொத்த மாறும் கிரயத்தின் 15% இற்குச் சமானமாகும். இது விற்பனை மாதத்தில் செலுத்தப்படுகிறது.

(5) ஏனைய மாறும் செலவினங்கள் மொத்த மாறும் கிரயத்தின் மீதமுள்ள பகுதியாகும். ஏனைய மாறும் மேந்தலைகளின் 50% ஆனவை அவை உறப்பட்ட (incurred) மாதத்திலேயே செலுத்தப்படுகின்றன. மீதமுள்ள தொகையானது அது உறப்பட்ட மாதத்திற்கு அடுத்துவரும் மாதத்தில் செலுத்தப்படுகிறது.

(6) நிலையான பணியாளர் சம்பளக் கிரயமானது மாதமொன்றிற்கு ரூ. 4 மில்லியனாக உள்ளது. அது உறப்பட்ட அதே மாதத்திலேயே செலுத்தப்படுகிறது.

(7) 2025 ஆம் ஆண்டிற்கான ஊழியர் மிகையூதியமான (staff bonus) ரூ. 3.5 மில்லியன் ஆனது 2026 மார்ச் மாதத்தில் செலுத்தப்பட வேண்டும்.

(8) 2026 சனவரி 01 இல் ஆரம்ப காசு மீதி ரூ. 2,350,000/- ஆகும்.

(9) மிகைப்படியான காசு, ஆண்டிற்கு 4% வட்டியைச் சம்பாதிக்கின்ற சேமிப்புக் கணக்கில் வைத்திருக்கப்படுகிறது. வட்டியானது ஒவ்வொரு மாத ஆரம்பத்திலும் உள்ள ஆரம்ப மீதியின் அடிப்படையில் கணிப்பிடப்படுகிறது.

நீங்கள் செய்யவேண்டியவை :

2026 சனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்கான காசுப் பாதீட்டைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

வினா 06

வரையறுக்கப்பட்ட X கம்பனி மூன்று வெவ்வேறு வகையான பொருள்களைத் தயாரித்து, விற்பனை செய்கிறது. கீழ்வரும் தகவல்கள், மூன்று பொருள்களினதும் நியமக் கிரய அட்டைகளிலிருந்து பிரித்தெடுக் கப்பட்டுள்ளன :

	ரூ. (அலகொன்றிற்கு)		
	P	**Q**	**R**
விற்பனை விலை	2,400	5,000	6,000
நேர் பொருள்	1,000	1,800	2,000
நேர் கூலி :			
திறமையான கூலி (மணித். ஒன்றிற்கு ரூ.800/-)	200	400	800
திறமையற்ற கூலி (மணித். ஒன்றிற்கு ரூ. 600/-)	450	600	1,200
மாறும் உற்பத்தி மேந்தலைகள்	300	450	900
காலாண்டிற்குப் பாதிடப்பட்ட விற்பனை (அலகுகளில்)	10,000	8,000	15,000

அடுத்த காலாண்டில், கிடைக்கத்தக்க கூலியானது பின்வருமாறு மதிப்பிடப்பட்டுள்ளது :

திறமையான கூலி	23,000 மணித்தியாலங்கள்
திறமையற்ற கூலி	40,000 மணித்தியாலங்கள்

நீங்கள் செய்யவேண்டியவை :

(a) கணிப்பீடுகளின் ஆதரவுடன் வரையறைக் காரணி/ காரணிகளை **அடையாளங் காண்க.** (04 புள்ளிகள்)

(b) அடையாளங் காணப்பட்ட வரையறைக் காரணி/ காரணிகளின் அடிப்படையில் உகந்த உற்பத்திக் கலவையைக் (optimal production mix) **கணிப்பிடுக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 07

Best PLC என்பது கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் பட்டியலிடப்பட்ட ஒரு கம்பனி ஆகும். பின்வரும் தகவல்கள் **Best PLC** இன் நிதிக் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

(1) **Best PLC** ஆனது 7 மில்லியன் சாதாரண வாக்குரிமைப் பங்குகளை விநியோகத்தில் கொண்டிருப்பதுடன், அவை பங்கொன்று ரூ. 100/- விலையில் வழங்கப்பட்டிருந்தன. இப்பங்குகள் தற்போது பங்கொன்று ரூ. 125/- விலையில் வர்த்தகம் செய்யப்படுவதுடன், கம்பனி கடந்த நிதியாண்டிற்காக பங்கொன்றிற்கு ரூ. 25/- என்ற அடிப்படையில் பங்கிலாபத்தைச் செலுத்தியுள்ளது. பங்கிலாபங்கள் ஆண்டிற்கு 10% இனால் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(2) **Best PLC** ஆனது 8 மில்லியன் பட்டியலிடப்பட்ட மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகளை விநியோகத்தில் கொண்டிருப்பதுடன், அவை ஆரம்பத்தில் பங்கொன்று ரூ. 60/- இற்கு வழங்கப்பட்டிருந்தது. இந்தப் பங்குகள், தற்போது பங்கொன்று ரூ. 64/- விலையில் வர்த்தகம் செய்யப்படுகின்றன. பங்கொன்றிற்கான வருடாந்தப் பங்கிலாபம் ரூ. 9.60 ஆகும்.

(3) இக்கம்பனி தனிச்சமொன்று ரூ. 100/- விலையில், ஆண்டிற்கு 14% என்ற கூப்பன் வீதத்துடன் 10 மில்லியன் பட்டியலிடப்பட்ட மீட்கத்தக்க தனிச்சங்களையும் விநியோகித்துள்ளது. தனிச்சம் ஒன்றின் தற்போதைய சந்தை விலை ரூ. 97/- ஆகும். அவை 4 ஆண்டுகளில் மீட்கப்படும்.

(4) கம்பனி 30% இல் வருமான வரி செலுத்துவதற்கான பொறுப்பு உள்ளது.

நீங்கள் செய்யவேண்டியவை :

பின்வருவனவற்றைக் **கணிப்பிடுக** :

(a) சாதாரண வாக்குரிமைப் பங்குகளின் கிரயம் (02 புள்ளிகள்)

(b) மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகளின் கிரயம் (02 புள்ளிகள்)

(c) மீட்கத்தக்க தனிச்சங்களின் கிரயம் (03 புள்ளிகள்)

(d) சந்தைப் பெறுமதியைப் பயன்படுத்தி, நிறையேற்றிய சராசரி மூலதனக் கிரயம் (WACC). (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

பகுதி B முடிவு

பகுதி C

(மொத்தம் 50 புள்ளிகள்)

வினா 08

Tab Ltd. ஆனது இரண்டு புதிய பொருள்களிலிருந்து (**பொருள் A** அல்லது **பொருள் B**) ஒரு பொருளைத் தெரிவு செய்து, அதனை உற்பத்தி செய்யச் சாத்தியமான முதலீடுகளைச் செய்வதற்காக இரண்டு செயற்றிட்டங்களை ஆராய்கிறது.

அவ்விரு செயற்றிட்டங்கள் தொடர்பான பின்வரும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன :

(1) ***செயற்றிட்டம் A:***

இங்கு, **பொருள் A** ஐ உற்பத்தி செய்வதற்கு ரூ. 200 மில்லியன் கிரயத்தில் ஒரு புதிய இயந்திரத்தைக் கொள்வனவு செய்ய வேண்டும். இந்த இயந்திரத்தின் பயன்தரும் ஆயுட்காலம் 5 ஆண்டுகள் ஆகும். இவ்வியந்திரத்திற்கான தேய்மானமானது இயந்திரத்தின் பயன்தரும் ஆயுட்காலம் ஈறாக கிரயத்தில், நேர்கோட்டு அடிப்படையில் கணிப்பிடப்படுகிறது. வரி நோக்கத்திற்காக இயந்திரம் மீதான மூலதன விடுதொகையானது ஆண்டிற்கு 25% இல் கோரப்பட முடியும்.

அடுத்த 5 ஆண்டுகள் ஈறாக வரிக்கு முந்திய வருடாந்த இலாபம் பின்வருமாறு எதிர்பார்க்கப்படுகிறது:

(ரூ.)

	ஆண்டு 1	**ஆண்டு 2**	**ஆண்டு 3**	**ஆண்டு 4**	**ஆண்டு 5**
வரிக்கு முந்திய இலாபம்	65,000,000	80,000,000	100,000,000	120,000,000	120,000,000

(2) **செயற்றிட்டம் B:**

இந்தச் செயற்றிட்டத்தில் புதிய **பொருள் B** ஐ சந்தைக்கு உற்பத்தி செய்வதற்கான ஆரம்ப முதலீடாக, ரூ. 150 மில்லியனை ஒரு புதிய இயந்திரத்தில் முதலீடு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வியந்திரத்தின் பயன்தரும் ஆயுட்காலம் 4 ஆண்டுகளாகும். முதலாவது ஆண்டின் காலப்பகுதியில் விற்பனை விலை ஓர் அலகிற்கு ரூ. 2,000/- ஆக இருக்குமென எதிர்பார்க்கப் படுகின்ற அதே வேளை, முதலாவது ஆண்டின் காலப்பகுதியில் மாறும் கிரயம் ஓர் அலகிற்கு ரூ. 1,600/- ஆக இருக்கும். அதன் பின்னர் விற்பனை விலையும், மாறும் கிரயமும் ஆண்டிற்கு 5% என்ற மதிப்பிடப்பட்ட பணவீக்க வீதத்திற்கேற்ப அதிகரிக்கப்படவுள்ளன. தேய்மானம் தவிர்ந்த செயற்றிட்டத்தின் நிலையான கிரயம் ஆண்டிற்கு ரூ. 12 மில்லியன் ஆகும். தேய்மானமானது கிரயத்தில், நேர்கோட்டு அடிப்படையில், இயந்திரத்தின் பயன்தரும் ஆயுட்காலம் ஈறாக அறவிடப்படுகிறது. வரி நோக்கத்திற்காக ஆண்டிற்கு 25% இல் மூலதன விடுதொகை கோரப்பட முடியும்.

அடுத்த 4 ஆண்டுகள் ஈறாக கீழ்வரும் எண்ணிக்கையிலான அலகுகள் உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனை செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது :

	ஆண்டு 1	**ஆண்டு 2**	**ஆண்டு 3**	**ஆண்டு 4**
அலகுகள்	180,000	235,000	260,000	200,000

(3) கம்பனி ஆண்டிற்கு 30% இல் வருமான வரி செலுத்துவதுடன் அது அவ்வாண்டிலேயே செலுத்தப்படுகிறது.

(கம்பனியின் மூலதனக் கிரயம் 15% ஆகும்.)

நீங்கள் செய்யவேண்டியவை :

(a) பின்வருவனவற்றின் நிகர இற்றைப் பெறுமதிகளைக் (NPV) **கணிக்குக** :

(i) **செயற்றிட்டம் A.**

(ii) **செயற்றிட்டம் B.** (12 புள்ளிகள்)

(b) **செயற்றிட்டம் A** மற்றும் **செயற்றிட்டம் B** இலிருந்து சிறந்த முதலீட்டுத் தெரிவை **அடையாளங் காண்க.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

வினா 09

வரையறுக்கப்பட்ட ரொக்கி கம்பனி பொருள் Z ஐ உற்பத்தி செய்து, விற்பனை செய்கிறது. பின்வரும் தகவல்கள் நியமக் கிரய அட்டையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

	ரூ. (ஓர் அலகிற்கு)
நேர் பொருள் :	
பொருள் X (0.1 kg – ஒரு kg ரூ. 700/- விலையில்)	70
பொருள் Y (1.9 kg – ஒரு kg ரூ. 1,000/- விலையில்)	1,900
நேர் கூலி (ஒரு மணித்தியாலத்திற்கு ரூ. 2,000/-)	500
மாறும் மேந்தலைகள் (ஒரு மணித்தியாலத்திற்கு ரூ. 600/-)	150
மொத்த மாறும் கிரயம்	**2,620**
விற்பனை விலை	3,200
பங்களிப்பு	**580**

கம்பனி 2025 டிசெம்பர் மாதத்திற்கு 80,000 அலகுகளை விற்பனை செய்யப் பாதிட்டுள்ளது. மாதமொன்றிற்காகப் பாதிடப்பட்ட நிலையான மேந்தலைகள் ரூ. 14,000,000/- ஆகும்.

2025 டிசம்பர் மாதத்திற்கான உண்மையான உற்பத்தி/ விற்பனைக் கணியம் 74,600 அலகுகளாகும். உண்மையான செயலாற்றுகை கீழே தரப்பட்டுள்ளது :

	ரூ.
விற்பனை வருமானம் (74,600 அலகுகள்)	246,180,000
நேர் பொருள் :	
பொருள் X (8,200 kg)	5,658,000
பொருள் Y (154,700 kg)	166,302,500
நேர் கூலிக் கிரயம் (19,100 மணித்தியாலங்கள்)	34,380,000
மாறும் மேந்தலைகள்	11,842,000
நிலையான மேந்தலைகள்	15,250,000

2025 டிசெம்பர் மாதத்திற்காக முகாமையால் பின்வரும் முரண்கள் கணிப்பிடப்பட்டுள்ளன :

	ரூ.	
நேர் கூலி வீத முரண்	3,820,000	சாதகமானது
நேர் கூலி வினைத்திறன் முரண்	900,000	பாதகமானது
விற்பனை எல்லை கனவளவு முரண்	3,132,000	பாதகமானது
மாறும் மேந்தலை செலவின முரண்	382,000	பாதகமானது
மாறும் மேந்தலை வினைத்திறன் முரண்	270,000	பாதகமானது
நிலையான மேந்தலை செலவின முரண்	1,250,000	பாதகமானது

நீங்கள் செய்யவேண்டியவை :

(a) பின்வரும் முரண்களைக் **கணிக்குக** :

(i) விற்பனை விலை முரண் (02 புள்ளிகள்)

(ii) நேர் பொருள் விலை முரண் (02 புள்ளிகள்)

(iii) நேர் பொருள் கலவை முரண் (03 புள்ளிகள்)

(iv) நேர் பொருள் விளைவு முரண் (03 புள்ளிகள்)

(b) பாதிடப்பட்ட பங்களிப்பை உண்மையான பங்களிப்புடன் இணக்கம் செய்வதற்கான தொழிற்பாட்டுக் கூற்றைத் **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

வினா 10

(A) **Champ Ltd.** ஆனது பல தொடர்ச்சியான செயன்முறைகள் ஊடாக பொருள்களை உற்பத்தி செய்கிறது. 2025 டிசெம்பர் மாதத்தில் **செயன்முறை 3** இற்கான உள்ளீடுகள் கீழே தரப்பட்டுள்ளன :

	ரூ.
செயன்முறை 2 இலிருந்து மாற்றப்பட்ட உள்ளீடு (40,000 லீட்டர்கள்)	16,000,000
நேர் கூலி	11,200,000
மாறும் உற்பத்தி மேந்தலைகள்	3,200,000

2025 டிசெம்பர் மாத ஆரம்பத்தில், 3,200 லீட்டர் ஆரம்ப புத்துருவாகும் வேலைகள் பின்வரும் பூர்த்தி மட்டங்களுடன் இருப்பில் காணப்பட்டன :

மூலப் பொருள்	100% பூர்த்தி, பெறுமதி ரூ. 680,000/-
நேர் கூலி	80% பூர்த்தி, பெறுமதி ரூ. 164,600/-
மாறும் உற்பத்தி மேந்தலைகள்	50% பூர்த்தி, பெறுமதி ரூ. 60,306/-

2025 டிசெம்பர் மாத இறுதியில், 7,000 லீட்டர் இறுதிப் புத்துருவாகும் வேலைகள் பின்வரும் பூர்த்தி மட்டங்களில் காணப்பட்டன :

மூலப் பொருள்	100%
நேர் கூலி	60%
மாறும் உற்பத்தி மேந்தலைகள்	40%

மாத இறுதியில், 32,500 லீட்டர்கள் முடிவுப் பொருள்களுக்கு மாற்றப்பட்டன.

செயன்முறை 2 இலிருந்தான உள்ளீட்டுப் பொருள்களிலிருந்து சாதாரண நட்டம் 8% ஆகும். சாதாரண நட்டத்தின் ஒடிவுப் பெறுமதி லீட்டர் ஒன்றிற்கு ரூ. 250/- ஆகும்.

நீங்கள் செய்யவேண்டியவை :

(a) சமான அலகுகள் மற்றும் கிரயக் கூற்றைத் **தயாரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) **செயன்முறை 3** கணக்கைத் **தயாரிக்குக.** (08 புள்ளிகள்)

(B) **Goodie Ltd.** ஆனது கீழுள்ள மூன்று புதிய பொருள்களில் ஒன்றைத் தெரிவு செய்து, அதன் உற்பத்தி வரிசையில் அறிமுகப்படுத்துவது பற்றி ஆராய்கிறது.

அம்மூன்று பொருள்கள் பற்றிய விபரங்களும் பின்வருமாறு :

பொருள்	**G**	**H**	**I**
விற்பனை/ உற்பத்தி – அலகுகளில்:			
உயர்ந்த அளவு	1,000,000	2,000,000	800,000
மத்திம அளவு	800,000	1,500,000	720,000
குறைந்த அளவு	600,000	1,200,000	650,000
விற்பனை விலை (ரூ/ ஓர் அலகிற்கு)	300	180	700
மாறும் கிரயங்கள் (ரூ/ ஓர் அலகிற்கு)	220	130	600

மேலுள்ளவற்றிற்கு மேலதிகமாக, விற்பனைக் கணியம் 700,000 அலகுகளைத் தாண்டினால், விற்பனை செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை மீது, அலகொன்றின் விற்பனை விலையில் 5% இற்குச் சமமான தொகையொன்று ஊக்கத்தொகையாகச் செலுத்தப்படுகிறது. விற்பனைக் கணியம் 900,000 அலகுகளைத் தாண்டியவுடன், விற்பனை செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை மீது, அலகொன்றின் விற்பனை விலையில் 10% இற்குச் சமமான தொகையொன்று ஊக்கத்தொகையாகச் செலுத்தப்படுகிறது.

நீங்கள் செய்யவேண்டியவை :

(a) மேற்படி தீர்மானங்களுக்கான பங்களிப்பை முன்வைக்கின்ற விளைவாய்வு அட்டவணையைத் (payoff table) **தயாரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) மிகைமிகை (Maximax) தேர்வு நிபந்தனையின் கீழ் எந்தப் பொருள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்பதை **அடையாளங் காண்க.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

பகுதி C முடிவு

செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

ஆற்றல் மட்டம்	விபரம்	செயல் வினைச்சொல்	வினைச்சொல் வரைவிலக்கணம்
அறிவு (1)	விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல்	**வரைக (Draw)**	வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல்
		தொடர்புபடுத்துக (Relate)	தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல்
		கூறுக/ குறிப்பிடுக(State)	திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல்
		அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)	கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல்
		நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)	தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல்

ஆற்றல் மட்டம்	விபரம்	செயல் வினைச்சொல்	வினைச்சொல் வரைவிலக்கணம்
முற்றடக்கம் (2)	யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும்	**ஏற்பிசைவு செய்க (Recognize)**	அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல்
		பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)	விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல்
		விளக்குக (Describe)	பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும்
		விபரிக்குக (Explain)	உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல்
		பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)	சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல்

ஆற்றல் மட்டம்	விபரம்	செயல் வினைச்சொல்	வினைச்சொல் வரைவிலக்கணம்
பிரயோகம் (3)	புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும்	**கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)**	வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல்
		வரைக (Graph)	வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல்
		மதிப்பிடுக (Assess)	பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல்
		தீர்க்குக (Solve)	கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல்
		தயாரிக்குக (Prepare)	குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல்
		எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)	உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல்
		கணிக்குக / கணிப்பிடுக (Calculate)	கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல்
		பிரயோகிக்குக (Apply)	நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல்

ஆற்றல் மட்டம்	விபரம்	செயல் வினைச்சொல்	வினைச்சொல் வரைவிலக்கணம்
பகுப்பாய்வு (4)	யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும்	**தொடர்பாடுக(Communicate)**	தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல்
		சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)	முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல்
		வேறுபடுத்துக (Contrast)	வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல்
		ஒப்பிடுக (Compare)	ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல்
		கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)	விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல்
		வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)	சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல்
		பகுப்பாய்வு செய்க (Analyze)	தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல்